உ

சிவமயம்.

நடேசர்சிந்து.

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூலபுத்தகங்களும்; அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும்; அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்கியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனி வாரசவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நடேசர் சிந்து.

சீரார்நடேசர் சிந்தென்றபாடல்
சீராகயானுரைக்க விநாயகா
சித்தம்வைத்தாளுமையா.

ஆனந்தநாதா ஆடியபாதா
மோனந்தமாகவந்தே நடேசா
முத்திதந்தாளுமையா 1

அய்யபரமே ஆதிசிவமே
மெய்யாயுனைப்பணியும் நடேசா
மைந்தனைக்காருமையா 2

கங்கைதரித்த வாகாலனையுதைத்தவா
மங்கைசிவகாமியுடன் நடேசா
மலர்ப்பதந்தந்தாளையா 3

சிவாமிபாகா சின்மயதேகா
பவமதைநீக்கியெந்தன் நடேசா
பிழைபொறுத்தாளுமையா 4

பஞ்சகிர்த்தியாதார பரமதயாபர
கெஞ்சுற பஞ்சைமீது நடேசா
கிருபைகூர்ந்தாளுமையா 5

சந்திரசடாதர சாம்பசிவஹர
சுந்தரகிருபாகர நடேசா
சுகப்பொருள் தந்தாளையா 6

சரியைகிரியையோகம் சார்ந்தஞானமாக
கரியைப்போர்த்ததேக நடேசா
கடையனைக்காருமையா 7

பதஞ்சலிவியாக்கிரர்க்கும் பாததெரிசனம்
நிதந்தந்துகார்த்ததுபோல் நடேசா
நேசமாய்த்தந்தாளையா 8

புரமூன்றெறிந்தவனே புண்ணியமானவனே
சிரமலைதரித்தவனே நடேசா
சிறியேனையாளுமையா 9

மோனஞானமான மூலகாரணனை
ஆனந்தத்தாண்டவனே நடேசா
அடியேனைககாருமையா 10

இல்லைச்சிதம்பரனே தொண்டர்துதி அரனே
அல்லல்படுவோனே நடேசா
ஆதரித்தாளுமையா 11

அன்னைதந்தையில்லை யன்பானபேருமில்லை
சொன்னேனுனையே யல்லால் நடேசா
சுகந்தர ஆருமில்லை 12

ஊரிருந்தென்ன உற்றாரிருந்தென்ன
ஆரிருந்துமென்ன நடேசா
அலையாதெனை யாளையா 13

நம்பினேனுன்னை நழுகாவிடாதென்னை
அம்பிகைபாகா முன்னை நடேசா
அன்பாயெனையாளையா 14

என்போலபாவி யுலகிலுலாவி
உன்னையே நிதங்கூறு நடேசா
உருகாதெனையாளையா 15

பத்திசெய்யாச்சிறியேனைப் பாரிலலைவோனை
உத்தமமினமையனை நடேசா
யுறுதியாயாளுமையா 16

எப்போதுமித்தேகம் இருந்தென்னயோகம்
ஒப்பிலாவுன்பதத்தை நடேசா
உகமையாய்த் தந்தாளையா 17

ஆரணனாரணற்கும் அனந்ததேவர்க்குங்
காரணமானவனே நடேசா
கருத்தாயெனையாளையா 18

நித்திரோனந்தமூர்த்தி நிமலா அருள்புத்தி
பத்தியாயுனைப்பணியும் நடேசா
பாலகனைக்காருமையா 19
இத்தனைநாளும் எளியேன்படுந்துயரம்
சுத்தனேநீதீர்த்து நடேசா
சுகம்பெறப்பாருமையா 20
பலவினைதீர்க்கும் பத்தரைகாக்கும்
தவபலமானோர்துதி நடேசா
பத்தனைக்காருமையா 21
பஞ்சாட்சரப்பொருளே பரமசுகப்பொருளே
அஞ்சாமல் தந்தருளே நடேசா
அன்பனைக்காத்தருளே 22
திருத்தில்லைராயாதேவர்சகாயா
வருத்தந்தனைத்தீர்த்து நடேசா
வடியனைக்காருமையா 23
தேவாதிதேவா திருமால்விடைமேல்வா
மூவர்க்குமேலானவா நடேசா
முன்னடியேனைக்காருமையா 24
முத்திக்குகந்தவனே முகுந்தர்க்காழிதந்தவனே
நித்தந்துதிக்குமெனை நடேசா
நிலைமையுடனாளுமையா 25
அஷ்டதிசைப்பதி ஆனந்தமானநிதி
இஷ்டமாய்நல்லகதி நடேசா
சந்தெனையாளுமையா 26

ஐம்புலத்தாலே அடியைக்காணாதாலே
இன்பம்வைத்துன்னடியை — நடேசா 27
ஏழைக்குத்தந்தாளையா

வையம்புகழ்மெய்யா மழுவேந்துங்கையா
ஒய்யாரமாகவந்தே — நடேசா 28
உகந்தென்னையாளுமையா

அஞ்செழுத்தோதி யருந்தவத்தோர்துதி
குஞ்சிதப்பாதந்தந்துன் — நடேசா 29
குழந்தையைக்காருமையா

ஆலவிடங்கண்டு அமரர்க்காகஉண்டு
நீலகண்டமானவரே — நடேசா 30
நீயென்னையாளுமையா

மாதர்வலையிற்பட்டு மயங்கினேனான்கெட்டு
பாதகனாகாமலே — நடேசா 31
பட்சம்வைத்தாளுமையா

தும்புருநாரதரை தூய்சுகமுனிவோரை
சம்பிரமமாகக்காத்தது போல் — நடேசா 32
சதிருடனாளுமையா

மால்மத்தளங்கொட்ட மலரோன்தாளந்தட்ட
கால்தூக்கி ஆடிநின்ற — நடேசா 33
கழலிணைதந்தாளையா

பொன்னுலகவானோர் புகழ்மயிலாப்பூர்
தன்னிலேவளரற்புதனே — கபாலீசா 34
தஇயிதுவந்தாளையா

காஞ்சிபுரியானே காமனையெரித்தோனே
ஆஞ்சிபடியேனுக்குன் ஏகாம்பரா
அருள் தந்துகாருமையா 35

திருவானைக்காவில் திருமால்தொழுங்கோவிலில்
உருவாகியேவிளங்கும் சம்புலிங்கா
உலகிலெனையாளையா 36

அண்ணாமலையான அன்பர்நிலையானே
உண்ணாமுலைப்பாகனே அருணாசலீசா
உகந்தெனையாளுமையா 37

திங்களணிநாதா தூயர்புகழ்பாதா
தங்கமயத்தென்காளத்தி நாயகா
தமியேனைக்காருமையா 38

சிலமுனிவர்தொழும் செல்வசிவகாமிமகிழ்
கோலப்பதங்களையே நடேசா
குறைவிலாதந்தாளையா 39

மந்திரமூலாமறையவர் நூலா
சுந்தரம்தொழும்சீலா நடேசா
சுந்தரர்க்கநுகூலா 40

ஆடும்நடேசர் ஆனந்தசிந்தை
பாடிப்படிப்போர்க்கு நடேசா
பரகதிதந்தாளையா. 41

நடேசர்சிந்து
முற்றிற்று.